# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புதல்:
திருமதி.S.M.பாரிஜான்,பி.ஏ.,
ஆணையாளர்
பவானி நகராட்சி,
பவானி.

பெறுதல் :
நகராட்சி நிர்வாக ஆணையரகம்
10-வது தளம், நகர் நிர்வாக
அலுவலக வளாகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 28.

ந.க.எண். 539/2020/சி1,நாள்:04.06.2020

அய்யா,

பொருள்: நிர்வாக அறிக்கை - பவானி நகராட்சி - 2017-18ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை-அனுப்பி வைத்தல்-தொடர்பாக.

பார்வை: நகர்மன்ற தீர்மான எண். 113 நாள்: 29.05.2020

****

பவானி நகராட்சியின் 2017-2018-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை நகர்மன்ற ஒப்புதல் பெற்று இத்துடன் இணைத்து இணைத்து அனுப்பி வைத்துள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்-.

4/6/20

ஆணையாளர்
பவானி நகராட்சி

4.6.2020

இணைப்பு :
1) நிர்வாக அறிக்கை
2) நகர்மன்ற தீர்மான நகல்.

நகல்: பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருப்பூர்.

## பவானி நகராட்சி

(ஈரோடு மாவட்டம்)

### அமைப்பும் மேலாட்சியும் :

### நகராட்சி எல்லை :

பவானி நகராட்சி 01.04.1978ம் தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக அரசு ஆணை எண். 502 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை) 30.03.1978ன்படி நிறுவப்பட்டது. இந்நகர் பேரூராட்சியாக செயல்பட்டபோது இருந்து வந்த எல்லையே நகராட்சியின் எல்லையாக இருந்து வருகிறது. இது பவானி ரெவின்யூ கிராமத்தை மட்டும் உள்ளடங்கியதாகும். தற்போது இந்நகராட்சி கடந்த 19.12.1990ம் தேதி அரசாணை எண். 1073ன்படி இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சி 2.17 ச.கி.மீ. (0.86 ச.மைல்) பரப்பளவு கொண்டது. நடப்பு ஆண்டில் நகராட்சி எல்லையின் மாறுதல் ஏதுமில்லை. 02.12.1983ம் தேதியிட்ட அரசு ஆணை எண். 1790 (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை)யின்படி இந்நகரம் 20 தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டது. 1996ம் ஆண்டு நகராட்சி தேர்தலை முன்னிட்டு வார்டுகளின் எண்ணிக்கை 20ல் இருந்து 27 ஆக உயர்த்தி அரசு ஆணை எண். 135 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 11.06.1996ல் உத்திரவிடப்பட்டது. தற்போது 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் செயல்முறை எண். 38078/96/எல்.3, நாள் 02.07.1996ல் ஒப்புதல் பெறப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

இறுதியாக பவானி நகராட்சியின் நகர் மன்றம் 24.10.2016 வரை செயல்பட்டு வந்தது. அரசாணை எண். 250, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 24.10.2016 இன்படி நகர்மன்றத்தின் பதவிக்காலம் முடிவுற்றதால் தனி அலுவலராக நகராட்சியின் ஆணையாளர் 25.10.2016 முதல் செயல்பட்டு வருகிறார்.

பவானி நகராட்சியின் நகர்மன்றத்திற்கு கீழ்கண்டவாறு இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | இதர வகுப்பினர் | 16 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைஜாதியினர் | 2 |
| 3. | பெண்கள் | 9 |
| | மொத்தம் | 27 |

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 39225 ஆகும். இதில் ஆண்கள் 19559, பெண்கள் 19666 ஆகும்.

**அலுவலர்கள் :**

இந்நகராட்சி 01.04.1978 முதல் தோற்றுவிக்கப்பட்டு 02.03.1986 மற்றும் 03.03.1991 முதல் 24.10.1996 முடிய மற்றும் 25.10.2016 முதல் நகர்மன்றப் பணியை தனிஅதிகாரியாக நகராட்சி ஆணையாளர் கவனித்து வருகிறார். பவானி நகராட்சியில் 1986 முதல் 1991 வரை, 1996 முதல் 24.10.2016 வரை உள்ளாட்சி தேர்தல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மன்றப்பணிகளை முன்னின்று நடத்தி வந்துள்ளனர். இந்நகராட்சிகளின் மற்ற நிர்வாக பொறுப்புகளை அனைத்து காலங்களிலும் ஆணையர் கவனித்து வருகிறார்.

**ஆணையாளர் :**

பவானி நகராட்சியில் 01.04.2017 முதல் 18.08.2017 வரை திரு.க.பாலு அவர்கள் மற்றும் 19.08.2017 முதல் 19.04.2018 வரை திருமதி.ஆர்.மகேஸ்வரி ஆணையாளர் குமாரபாளையம் அவர்கள் ஆணையாளராக கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்.

தற்போது இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் திரு.க.கதிர்வேல் அவர்கள் 20.04.2018 முதல் ஆணையாளர் பொறுப்பினை கூடுதலாக கவனித்து வருகிறார்.

**மேலாளர் :**

பவானி நகராட்சியின் மேலாளராக திருமதி. என்.ஆர்.ராஜேஸ்வரி அவர்கள் 12.07.2015 முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

**நகர்மன்ற தேர்தல் :**

நடப்பாண்டில் நகர்மன்ற தேர்தல் எதுவும் நடைபெறாததால் 01.04.2017 முதல் 31.03.2018 வரை தனி அலுவலர் பொறுப்பினை நகராட்சி ஆணையாளரே வகித்து வந்துள்ளார்.

**பணியமைப்பு:**

பவானி நகராட்சியில் அவ்வப்போது அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளின்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி வருகின்றனர்.

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விபரம் (01.04.2017 அன்றைய நிலையில்)

| பிரிவு | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள் | காலிப் பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| பொதுப் பிரிவு | மேலாளர் | 1 | 1 | 0 |
| | கணக்காளர் (உதவியாளர்) | 1 | 1 | 0 |
| | உதவியாளர் (சத்துணவு கணக்காளர் ) | 1 | 1 | 0 |
| | இளநிலை உதவியாளர் | 6 | 4 | 2 |
| | தட்டச்சர் | 1 | 0 | 1 |
| | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 |
| | அலுவலக உதவியாளர் | 2 | 2 | 0 |
| | இரவு காவலர் | 1 | 1 | 0 |
| | வருவாய் ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| | வருவாய் உதவியாளர் | 5 | 3 | 2 |
| பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு | நகராட்சி பொறியாளர் | 1 | 1 | 0 |
| | உதவிப் பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 1 | 1 | 0 |
| | குழாய் ஆய்வாளர் | 1 | 0 | 1 |
| | குழாய் பொருத்துநர் | 1 | 1 | 0 |
| | தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர் | 1 | 1 | 0 |
| | குழாய் திறப்பாளர் | 1 | 1 | 0 |
| | மின் பணியாளர் | 3 | 3 | 0 |
| | படுகைத் தொட்டி இயக்குபவர் | 2 | 2 | 0 |
| | நீர்த் தேக்கத் தொட்டி துலக்குநர் | 1 | 0 | 1 |
| | நீரேற்று நிலைய துலக்குநர் | 1 | 0 | 1 |
| | படுகைத் தொட்டி துலக்குநர் | 1 | 0 | 1 |
| | மின் கம்பியாளர் | 1 | 1 | 0 |
| | தலைமை நீரேற்று நிலைய உதவியாளர் | 1 | 1 | 0 |
| | தெருவிளக்கு உதவியாளர் | 1 | 0 | 1 |
| | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | 0 |
| | மேல்நிலைத் தொட்டி காவலர் | 1 | 0 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு ஆய்வர் | 1 | 1 | 0 |
| தகவல் தொழில் நுட்ப பிரிவு | உதவி கணினி திட்ட அமைப்பாளர் | 1 | 0 | 1 |
| சமுதாய அமைப்பாளர் பிரிவு | சமுதாய அமைப்பாளர் | 1 | 1 | 0 |
| பொது சுகாதார பிரிவு | துப்புரவு அலுவலர் | 1 | 1 | 0 |
| | துப்புரவு ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 4 | 4 | 0 |
| | ஓட்டுநர் | 4 | 4 | 0 |
| | களப்பணி உதவியாளர் | 1 | 0 | 1 |
| | மகப்பேறு உதவியாளர் | 1 | 1 | 0 |
| | மகப்பேறு ஆயா | 1 | 0 | 1 |
| | துப்புரவு பணியாளர்கள் | 86 | 54 | 32 |
| | மயானக் காவலர் | 1 | 1 | 0 |
| | மொத்தம் | 142 | 96 | 46 |

மேற்கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.53323724/-ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தும் கருணை அடிப்படையிலான முறையிலும் நேரடி நியமன முறையிலும் மற்றும் பதவி உயர்வு மூலமும் பூர்த்தி செய்யப்பட்டு நிர்வாகம் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## தெருவிளக்கு:

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 27 வார்டுகளில் தெருவிளக்குகளை பராமரிக்க தனியார் நிறுவனத்திற்க்கு ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் மின்கட்டண செலவினங்களாக ஆண்டிற்கு ரூ.1000000/- செலவு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் தெருவிளக்குக்கு நியமிக்கப்பட்ட மின்கம்பியாளர் மற்றும் உதவியாளர், இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் உள்ள கைபம்பு, மின்விசைபம்பு மற்றும் அலுவலக ஜெனரேட்டர் ஆகியவை பராமரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்

**சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள்:**

**1. சாலைகள் :**

இந்நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலைகள் ஏதும் செல்வதில்லை.

நகராட்சியின் பராமரிப்பில் உள்ள சாலைகளின் நீளம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. ஸ்டேட் ஹைவேஸ் | .. | 3.00 கி.மீ. |
| 2. சிமெண்ட் ரோடு | .. | 9.03 கி.மீ. |
| 3. தார் சாலை | .. | 22.39 கி.மீ. |
| 4. கிராவல் ரோடு | .. | -- |
| மொத்தம் | .. | 34.42 கி.மீ. |

2. தெருவிளக்கு வசதி

இந்நகராட்சியின் எல்லைக்குள் உள்ள தெரு விளக்குகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்ததை 15.09.1989ம் தேதி முதல் அரசு உத்திரவுப்படி தற்போது எல்லா தெரு விளக்குகளையும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் கீழ்கண்ட தெரு விளக்குகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 15 வாட்ஸ் LED விளக்குகள் | .. | 1032 |
| 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | .. | 147 |
| உயர்மின் கோபுர விளக்கு | .. | 3 |
| T.5. Light | .. | 4 |
| கோபுரவிளக்குகள் | .. | 4 |
| மொத்தம் | .. | 1190 |

**திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகள்:**

பவானி நகராட்சியில் 2017-18 ஆம் ஆண்டுகளில் கீழ்கண்ட திட்டப் பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டும் நடைபெற்றுக் கொண்டும் உள்ளது. முடிக்கப்பட்ட பணிகள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**2017-2018 திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகள்:**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்புற நாலை மேம்பாடு திட்டம் | சாலை பணிகள் | 1 | 70.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | சாலை பணிகள் | 1 | 40.00 |
| | | பூங்கா மேம்படுத்துதல் மற்றும் நியாய விலை கடை கட்டுதல் | 2 | 11.00 |
| 3 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | ஆழ்துளைக் கிணறு அமைத்தல், சாலை அமைத்தல், மழைநீர் வடிகால் கட்டுதல், பள்ளி பணிகள், கழிப்பிடம் கட்டுதல் மற்றும் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டுதல் | 9 | 40.50 |
| 4 | 14வது மாநில நிதிக் குழு திட்டம் | சாலை அமைத்தல் மற்றும் மழை நீர் வடிகால் கட்டுதல் | 3 | 47.00 |
| 5 | தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் | அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை கட்டுதல் | 1 | 49.00 |
| 6 | வறட்சி நிவாரண திட்டம் | ஆழ்துளைக் கிணறு அமைத்தல் | 3 | 24.00 |
| 7 | பொது நிதிப் பணிகள் | அலுவலக பதிவறை கட்டுதல், வசூல் மையம் அமைத்தல் மற்றும் கழிப்பிடம் பழுதுபார்த்தல் | 4 | 13.00 |
| 8 | குடிநீர் பணிகள் | குளோரினேசன் பிளான்ட் அமைத்தல், மேல் நீர்தேக்க தொட்டி கட்டுதல் | 5 | 41.00 |
| 9 | அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் | | 58 பயனாளிகள் | |
| | மொத்தம் | | | 335.50 |

## பொது சுகாதாரம்:

இந்நகராட்சியல் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி 39225 மக்கள்தொகை ஆகும். இந்நகராட்சியில் தினமும் 20 MT குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## முதன்மை சேகரிப்பு விவரம்:

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியின் நிரந்தர துப்புரவு பணியாளர்கள | 54 |
| 2 | அயர்பணி ஒப்படைப்பு முறை துப்புரவு பணியாளர்கள | 60 |
| 3 | இந்நகராட்சி பகுதயில் மொத்தமுள்ள வீடுகளின் எண்ணிக்கை பரப்புரையாளர்களின் கணக்கெடுப்பின் படி | 10949 |
| | | தள்ளுவண்டிகள் - |

| | | | |
|---|---|---|---|
| 4 | குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் | 67 எண்ணிக்கை (வீடுகளுக்கு) |
| | | மினி ஆட்டோ (LCV) -1 வணிக நிறுவனங்களுக்கு |

மேற்குறிப்பிட்ட 10949 வீடுகளிலும் குப்பைகள் வீடுகள் தோறும் சென்று 100 சதவீதம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

குப்பைகள் உருவாகும் இடத்திலேயே 80 சதவீதம் வீடுகளில் குப்பைகள் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு வருகிறது.

**இந்நகராட்சியில் உருவாகும் குப்பையின் வகைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | மட்கும் கழிவுகள் | 9 MT |
| 2. | பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் | 1.5 MT |
| 3. | மக்கதா மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படாத கழிவுகள | 1.5 MT |
| 4. | இரும்பு மற்றும் பாட்டில்கள் ரப்பர்கள் | 3.5 MT |
| 5. | சாக்கடை மண் (Silt) | 2 MT |
| 6. | எஞ்சிய மற்றும் இதர கழிவுகள் - | 2.5 MT |
| | **மொத்தம்** | 20 MT |

இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களில் தனிநபர் உருவாக்கும் கழிவு 0.496 Gram per day (Per capita waste) ஆகும்.

**இரண்டாம் நிலை சேகரிப்பு விவரம்:**

வீடுவீடாக சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவகளை மினி ஆட்டோ மூலமும் , உலர்கழிவுகளை டிப்பர் லாரி மூலமும், கலப்பட கழிவுகள் டம்பர் பிளேசர், காம்பேக்டர் வாகனங்கள் மூலம் தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாம நிலை சேகரிப்புக்கு மொத்தம் 4 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2.5$m^3$ கொள்ளளவு கொண்ட டம்பர் பிளேசர் பின்கள் 16 எண்ணிக்கையும், 1.1 $m^3$ கொள்ளளவு கொண்ட 45 காம்பாக்டர் பின்களும் இரண்டாம் நிலை சேகரிப்புக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மிகை கழிவுகள் உருவாக்குபவர்களின் விபரம்(Bulk Waste Generators)**

இந்நகராட்சி பகுதியில் 3 மிகைக்கழிவு உருவாக்குபவர்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளவர்களில் 2 பேர் தங்கள் சொந்த இடத்திலேயே மக்கும் கழிவுகளை அப்புறப்படுத்த வசதியினை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மீதமுள்ள 1 மிகை கழிவு உற்பத்தியாளர் தங்கள் நிறுவனத்தில் சேகரமாகும் மக்கும் கழிவுகள் (திருமணம் மண்டபம்) அவர்களது பண்ணைக்கு அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

**குப்பைகளை செயலாக்கம் செய்து இறுதியாக அகற்றுதல் (Decentralized Composting)**

இந்நகராட்சி பகுதியில் பழையபஸ்நிலையம் அருகிலும், தினசரி சந்தை பகுதியிலும் 2 இடங்களில் பரவலாக்கப்பட்ட செய்முறை மூலம் (Decentralized Composting) ஜனவரி மாதம் முதல் வீடுகள் தோறும் சேகரமாகும் மக்கும் கழிவுகளை கொண்டு உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு தினமும் மார்க்கெட் கழிவுகள் உட்பட 2.5MT குப்பைகள் கையாளப்பட்டு வருகிறது.

**துாய்மை இந்தியா திட்டம்:**

பவானி நகராட்சி பகுதியில் துாய்மை இந்தியா திட்டம் - துாய்மை நகர கணக்கெடுப்பு - 2018 ஸ்வச் சர்வாக்ஷான் (Swachh Survekahsan) ——ன் படி இந்நகராட்சி பகுதியில் பொது சுகாதாரம் பற்றிய கோப்புகளின் ஆய்வு பணி 22.02.2018 மற்றும் 23.02.2018 ஆகிய இரு தினங்கள் நடைபெற்று கோப்புகளின் நகல்கள் மற்றும் சான்றுகள் தர கட்டுப்பாட்டு கண்காணிப்பு (QCI) வழங்கப்பட்டன. மேலும், துாய்மை நகர கணக்கெடுப்பு 2018-ன் கீழ் நகராட்சி பகுதியிலுள்ள பொது கழிப்பிடங்கள், சமுதாய கழிப்பிடங்கள், தனிநபர் கழிப்பிடங்கள்(IHHL), தினசரி மார்க்கெட், பேருந்து நிலைய பகுதி, வணிக நிறுவன பகுதி, நகராட்சி பகுதியில் உள்ள தெருக்கள், வார்டுகளில் பணிபுரியும் துாய்மை பணியாளர்களின் விவரங்கள், இரண்டாம் நிலை சேகரிப்பிற்கு பயன்படுத்தப்படும் வாகனத்தின் பணிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், பெட்ரோல் பங்க் மற்றும் நகராட்சி உரக்கிடங்கு ஆகியவற்றில் 21.02.2018, 22.02.2018 மற்றும் 23.02.2018 ஆகிய மூன்று தினங்கள் தர கட்டுப்பாட்டு கண்காணிப்பு (QCI) மூலம் கள ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டும் புகைப்படங்கள், எடுக்கப்பட்டும் கள ஆய்வு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது .

**திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி குறித்த விபரம்**

| | |
|---|---|
| நகராட்சியின் பெயர் | பவானி நகராட்சி |
| மக்கள் தொகை | 39225 |
| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | 27 |

| | |
|---|---|
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 11166 |
| கழிவறை உள்ள வீடுகளின் எண்ணிக்கை | 10072 |
| கழிவறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை | 1094 |
| கழிவறை இல்லாத வீடுகளின் மக்கள் தொகை | 4376 |
| சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களின் எண்ணிக்கை | 33 |
| கழிப்பிட இருக்கைகளின் எண்ணிக்கை | ஆண் -117 seats ,<br>பெண் - 148 seats,<br>குழந்தைகள் -7 seats,<br>மாற்றுதிறனாளி – Nil |
| திறந்தவெளி கழிப்பிட இல்லாத நகராட்சியாக அறிவிக்கப்பட்ட நாள் | 07.01.2018 |

## கல்வி

## துவக்கக்கல்வி

**கல்வி வசதிகள் :**

இந்நகராட்சி எல்லைக்குள் நடுநிலைப் பள்ளிகள் இரண்டும், துவக்கப் பள்ளிகள் மூன்றும் ஆக ஐந்து பள்ளிகளும், அரசு உதவி பெறும் தனியார் துவக்கப் பள்ளிகள் 3 ஆக மொத்தம் 8 பள்ளிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நகரத்தில் 01.10.1979 முதல் கட்டாயக் கல்வி செயல்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா குழந்தைகளும், சாதி மத வேறுபாடின்றி கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்நகர்மன்ற அனைத்து பள்ளிகளிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற வேறுபாடின்றி கல்வி பயின்று வருகின்றனர். அறிக்கையாண்டில் துவக்கப் பள்ளியில் பயிலும் சிறுவர் சிறுமியர்களுக்கு உடல்நலப் பரிசோதனை நடைபெற்றது.

01.04.1990 முதல் அரசு ஆணை எண். 347 கல்வித்துறை நாள் 09.03.1990ன்படி அனைத்து நகராட்சிப் பள்ளிகளிலும் பணிபுரிந்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அனைத்து பணியாளர்களும் கல்வித் துறையின் கீழ் மாற்றம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**இட வசதியும், தளவாடங்களும் :**

பவானி வடக்கு துவக்கப்பள்ளி, பவானி கிழக்கு நகராட்சி நடுநிலைப் பள்ளி, வர்ணபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, காமராஜ் நகர் துவக்கப்பள்ளி, பசுவேஸ்வரர் துவக்கப்பள்ளி ஆகிய 5 பள்ளிகள் நகராட்சி சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

## நூலகம்

பவானி நகராட்சி மூலம் தனியாக நூலகம் எதுவும் நடத்தப்படவில்லை. எனவே ஈரோடு மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## பொது நலம்

## BHAVANI URBAN HEALTH CENTRE

### நகர்நலமையம்

### 1. மருத்துவ வசதி :

பவானியில் ஆயுர்வேத, சித்தா, ஹோமியோபதி, அலோபதி மருத்துவமனைகள் ஏதும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

அரசு மருத்துவமனை தொடர்ந்து அறிக்கையாண்டில் இயங்கி வந்தது. அரசு மருத்துவமனை தவிர தனியார் மருத்துவமனைகள் நடந்து வருகிறது. தற்போது உள்ள மக்கட்தொகைக்கு வசதிகள் போதுமானதாக உள்ளது. இந்நகருக்கு 16 கி.மீ. தொலைவில் ஈரோட்டில் மாவட்ட தலைமை மருத்துவமனை இயங்கி வருகிறது.

1. மகப்பேறு உதவிக்காக பழைய பஞ்சாயத்து அலுவலக சாலையில் அனுசுயா பிரசவ விடுதி தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் 5 படுக்கைகள் உள்ளன. இதைத் தவிர மருத்துவமனையிலும் மகப்பேறு வசதிகள் உள்ளது. இதுதவிர நகராட்சியின் முலம் ஒரு நகர்நல மையம் மாவட்ட சுகாதாரப்பணிகள் கண்காணிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. நகராட்சி மகப்பேறு விடுதியில் ஒரு மகப்பேறு உதவியாளரும், ஒரு மருத்துவர் மற்றும் 3செவிலியர்கள் அறிக்கை ஆண்டில் பணியாற்றி வந்துள்ளனர். கர்ப்பினிக்கு பிரசவத்திற்குமுன்பும், பின்பும் ஆலோசனை தரப்படுகிறது.

3. மகப்பேறு இறப்பு ஒன்றும் இல்லை.

4. மகப்பேறு விடுதியினை பராமரிக்க ஆகும் செலவை நகராட்சி ஏற்றுக் கொள்கிறது.

2. பொது கழிப்பிடங்கள் :

பவானி நகராட்சியில் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் தனித்தனியே உபயோகிக்க 30 சமுதாய கழிப்பிடங்களும் 3 பொதுக்கழிப்பிடங்களும் உபயோகத்தில் உள்ளன. கட்டணம் செலுத்தி பயன்படுத்தப்படும் கழிப்பிடம் இரண்டு இந்நகராட்சியால் பராமரிக்கப்படுகிறது.

3. துப்புரவு ஊழியர்களின் நலன் :

துப்புரவு ஊழியர்களுக்கென தனியாக இருப்பிடங்கள் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. ஆண், பெண் துப்புரவு தொழிலாளர்களுக்கு இரண்டு செட் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. அனைத்து பணியாளர்களுக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் காலணிகள் வழங்கப்பட்டுள்ளது.

4. திருவிழாக்கள்

விளம்பரப்படுத்தப்பட்ட திருவிழா ஏதும் இந்நகராட்சி எல்லைக்குள் நடைபெறவில்லை. இந்நகரில் சங்கமேஸ்வரர் கோவில் என்ற புகழ் பெற்ற புனிதஸ்தலம் உள்ளது. இக்கோவிலுக்கு ஆண்டு முழுவதும் பக்தர்கள் வந்து போகிறார்கள். இக்கோவில் காவிரி மற்றும் பவானி சங்கமம் ஆகுமிடத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியை “கூடுதுறை” என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. நகரில் ஆண்டுதோறும் மாசிமாதம் செல்லியாண்டியம்மன் திருவிழா முக்கியப் பண்டிகையாகும். அச்சமயம் இந்நகரில் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து கூட்டம் திரளாகக் கூடும். திருவிழா சமயத்தில் நகராட்சி பிரத்யோக துப்புரவு ஏற்பாடுகள் செய்து வருகிறது.

5. குடிநீர் வழங்குதல்

1981ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி பழைய குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாத காரணத்தால் பெருகிவிடும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு பவானி நகருக்கு என்று தனியே பவானி குடிநீர் அபிவிருத்தி திட்டம் 1984ல் ஆரம்பிக்கப்பட்டு ரூ.97.00 லட்சம் செலவில் ஆயுள் காப்பீடு கழகத்தின் மூலம் கடன் உதவி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்படி அபிவிருத்தி திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிவு பெற்றுள்ளது. தற்போது இந்த புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் தற்போது பவானி நகரில் உள்ள பொது மக்களுக்கு முழுமையாக பயன்படுத்தும் வகையில் இந்த குடிநீர் திட்டம் மூலம் நகராட்சியால் சீரான முறையில் தினமும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சிக்கு பழைய புதிய இரண்டு மேல்நிலைத்தொட்டிகள் மூலம் நகரை 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காலை, மாலை ஆகிய நேரங்களில் தினசரி பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு 42.00 லட்சம் லிட்டர் தண்ணீர் சீரான முறையில்

வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 107 லிட்டர் என்ற அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

பொது குடிநீர் குழாய்கள் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளின் விபரம் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. வீட்டு உபயோக குடிநீர் இணைப்பு | .. | 4888 |
| 2. வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகள் | .. | 107 |
| மொத்தம் | .. | 4995 |

<u>பொது குடிநீர் குழாய்கள்</u> :

| | | |
|---|---|---|
| 1. ஒற்றை குடிநீர் குழாய்கள் | .. | 150 |
| 2. இரட்டை குடிநீர் குழாய்கள் | .. | 17 |
| மொத்தம் | .. | 167 |

நடப்பு ஆண்டில் புதியதாக பொது குடிநீர் குழாய் எதுவும் நிறுவப்படவில்லை.

<u>மழைநீர் சேகரிப்புத் திட்டம்</u> :

இந்நகரில் உள்ள 11,147 குடியிருப்பு வீடுகளுக்கும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் இந்நகரில் உள்ள நகராட்சிக்குச் சேர்ந்த 50 கட்டிடங்களில் (அலுவலக கட்டிடம், தலைமை நீரேற்று நிலையம், தாய் சேய் நல விடுதி, வணிக வளாகம், பள்ளிக் கட்டிடம்) மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. வேறு துறையைச் சார்ந்த அரசு கட்டிடங்கள், ஆழ்குழாய் கிணறுகள், பொது குழாய்கள் அமைந்துள்ள இடங்களில் 216 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

<u>புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம்</u> :

இந்நகரின் வடக்குப் பகுதியில் உள்ள அண்ணாநகர் மேற்பகுதியில் உள்ள சீனிவாசபுரம் கல் தொழிலாளர் தெருக்களும், தெற்குப் பகுதியில் உள்ள அக்ரஹாரம் பகுதியிலும் சீரான குடிநிர் வினியோகம் வழங்க மேலே தெரிவிக்கப்பட்ட தெருக்களில் ஒவ்வொரு பகுதியிலும் 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள 3 மேல்நிலைத் தொட்டிகளும் தற்போது உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய மோட்டார்கள் மாற்றி புதிய மோட்டார்கள் அமைக்கவும், நகரில் குடிநீர் வினியோக குழாய்கள் இல்லாத இடங்களில் குடிநீர் வினியோக குழாய்கள் பதிக்கவும் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் அரசு அனுமதி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்டு 3 மேல்நிலைத் தொட்டிகள் அண்ணாநகர் மற்றும் கல்தொழிலாளர் தெரு, பழைய பேருந்து நிலையம் ஆகிய மூன்று இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தினமும் 42.00 லட்சம் லிட்டர் தண்ணீர் சீரான முறையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

1979-80ம் ஆண்டு முதல் வீட்டுக்கு கொடுக்கப்படும் வீட்டு குடிநீர் இணைப்பும் மீட்டர் முறையில் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகிறது. 86 ஆழ்குழாய் கிணறுகள் பவானி நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சியில் பராமரிப்பில் உள்ள குடிநீர் வினியோக குழாயின் நீளம் 30.00 கி.மீ. மேலும் தண்ணீர் வழங்குதலை மேம்படுத்த நகரில் மொத்தம் 30 இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றின் கைப்பம்புகள் பொருத்தப்பட்டு உள்ளது. மேலும் கீழ்கண்ட இடங்களில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் 3 ஹெச்.பி. ஏர் கம்ப்ரசர் மோட்டார் வைத்து அப்பகுதி மக்களுக்கும் அங்குள்ள பொதுக் கழிப்பிடங்களுக்கும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**வடிகால் வசதி :**

இந்நகரில் திறந்த வடிகால் தான் உள்ளது. விரிவான புதை வடிகால் திட்டம் ஏதுமில்லை.

**கழிவு நீர் பண்ணைத் திட்டம் :**

இந்நகராட்சிக்கு கழிவு நீர் பண்ணைத் திட்டம் ஏதுமில்லை.

**போக்குவரத்து :**

இந்நகராட்சியில் "பி" வகுப்பு பேருந்து நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்படி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணமாக

பேருந்து ஒன்றுக்கு ரூ.12/- வசூலிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூலிக்கும் உரிமம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குத்தகை தொகைக்கு ஏலம் போகாததால் நகராட்சியால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது சராசரியாக நாள் ஒன்றுக்கு 275 பேருந்துகள் வந்து செல்கின்றன. அதன்படி நாள் ஒன்றுக்கு ரூ. 3300/- வசூல் செய்யப்பட்டு நகராட்சி கரூவூலத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.12.00 இலட்சம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டப்படுகிறது.

பவானி நகராட்சியில் வாரச் சந்தை எதுவும் செயல்படுவதில்லை. தினசரி நாளங்காடிகள், மீன் மார்கெட், இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் (2) ஆகியன இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**அம்மா உணவகம்:**

பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜே.ஜெயலலிதா அவர்களால் துவக்கிவைக்கப்பட்ட அம்மா உணவகம் 24.05.2015 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**சத்துணவுத் திட்டம் :**

பவானி நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் 5 நகராட்சி பள்ளிகளில் சத்துணவு திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

**நகராட்சியின் வருமானமும் செலவினமும்:**

பவானி நகராட்சியின் சொத்துவரி, தொழில்வரி குடிநீர் கட்டணம், குத்தகை இனங்கள், இதர கட்டணங்கள் மற்றும் அரசிடம் இருந்து பெறப்படும் மானியங்கள் மூலம் ஆண்டுக்கு உத்தேசமாக ரூ.804.21 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது. இதில் நிர்வாக செலவுகள் நகர மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் ஆகியவற்றிற்காக ரூ.804.21 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே வருமானத்திற்கும் செலவினத்திற்கும் பற்றாக்குறை ஏதும் இல்லை.

இடம்: பவானி (ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
நாள்: 04.06.2020. ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி

பவானி நகரமன்ற தீர்மானம் எண் : 113 நாள் 29.05.2020 ன் உண்மை நகல்.
((()))

பவானி நகராட்சியின் 2017-2018-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் : 113 நாள் 29.05.2020ன் உண்மை நகல்.

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.எஸ்.எம்.பாரிஜான்
ஆணையாளர்/ தனி அலுவலர்
பவானி நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
பவானி நகராட்சி